REGD. NO. M. 6511 ★ தனி இதழ் 0—1—6 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 85630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 5] சென்னை: ஆடி 18உ வெள்ளி (2—8—57) ★ ★ வெளியூர்: ஆடி 19உ சனி (3—8—57) [இதழ் 41

சேலத்தில் அலுமினியத் தொழிற்சாலை

முதலிடம் தருவோம் என்ற முடிவு நிலைக்குமா?

புதுடில்லி, ஆக. 1—

சேலத்தில் ஒரு அலுமினியத் தொழிற்சாலை நிறுவப்படும் என்று முன்பு தந்த உறுதிமொழியைக் காப்பாற்றுவதாக டில்லி சர்க்கார் மீண்டும் உறுதி கூறியிருக்கிறது.

ஒரு அலுமினியத் தொழிற்சாலை உட்பட பல தொழிற்சாலைகளை உ. பி. மாநிலத்தில் நிறுவுவது பற்றிக் கேட்கப்பட்ட போது தொழில் வர்த்தக மந்திரி டி. பி. கார்மார்க்கர்; 'அவை

(4-ம் பக்கம் பார்க்க)

காந்தியார் பிரார்த்தனை நடத்திய மேடை......!

'துப்பாக்கி குண்டுகளால் துளைக்கப்பட்டது வெட்கக்கேடானதாகும்'

மக்கள் சபையில் கண்டன முழக்கம்

புதுடில்லி, ஆக. 1—

டெல்லி நகரசுத்தித் தொழிலாளர்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்த கொடுஞ்செயலை மக்கள் சபையில், காங்கிரசார் உட்பட பல கட்சிக்காரர்களும், பெரும் அளவில் கண்டித்திருக்கின்றனர்.

'நீதிபூர்வமான விசாரணை வேண்டும்' என்று பலரும் கோரினர். 50 நிமிடங்கள் வரையில் மக்கள் சபையில், ஆத்திரமும் கோபமும் பொங்கிவழிந்த கண்டனப் பேச்சுக்கள் ஒலித்துக்கொண்டே இருந்தன.

★

காந்தியார் வாழ்ந்த இடத்தில்!

"காந்தியார் வாழ்ந்த இடத்தில் இந்தச்சம்பவம் நடைபெற்றது, மிகக் கொடுமையானது; வெட்கப்படத்தக்கது; இந்தச் சம்பவத்திற்கு மாவட்ட நீதிபதியும், போலீசாருமே பொறுப்பாளிகள்; காந்தியார் எந்த இடத்தில் நின்று பிரார்த்தனைக் கூட்டம் நடத்துவாரோ அந்த மேடைமீது துப்பாக்கிக் குண்டுகள் பாய்ந்திருக்கின்றன. இது வெட்கக்கேடானதாகும்."

என்று பால்மிகி என்ற உறுப்பினர், கண்டனம் முழக்கியிருக்கிறார்.

"உதவி நீதிபதியைக் கொண்டு விசாரணை நடத்துவதில் பலனே இல்லை"

என்றும் அந்த உறுப்பினர் கூறியிருக்கிறார்.

திருமதி கிருபளானி (காங்) பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

"சம்பவம் நடைபெற்ற இடத்தைப் பார்த்தேன்; நெருக்கமான அந்த இடத்தில் போலீசார் புகுந்து, இஷ்டம்போலத் துப்பாக்கியைச் சுழற்றியிருப்பதைப் பார்த்தேன்."

மேலும் பல உறுப்பினர்கள், 'இந்தத் துப்பாக்கிப் பிரயோகம் தேவையற்றது—தவிர்த்திருக்கக் கூடியது' என்று கண்டித்தனர்.

★

நேரு பார்த்தாராம்!

சம்பவம் நடைபெற்ற இடத்தை நேரு பண்டிதர் பார்வையிட்டிருக்கிறார். அங்குள்ள மக்கள் அவருக்கு, துப்பாக்கிக் குண்டுகள் பாய்ந்த இடத்தையும், குண்டடி பட்டவர்களின் உடலிலிருந்து கொட்டிய இரத்தக்கறையையும், இரத்தம்தோய்ந்த துணிகளையும் காட்டியிருக்கின்றனர்.

வேலைநிறுத்தம் நின்றது

தங்களின் கோரிக்கைகளைப் பரிசீலிப்பதற்காக தூதுக் குழு ஒன்றைச் சந்திக்க உள்நாட்டு அமைச்சர் சம்மதம் தெரிவித்ததையொட்டி நகரசுத்தித்தொழிலாளர்கள், தங்களின் வேலைநிறுத்தத்தை நிறுத்திவைத்துள்ளனர்.

பெண் போலீஸ் படை

உ.பி.-யில் கலைக்கப்பட்ட காரணம்

"உ. பி. மாநிலத்தில் பெண் போலீஸ் படை வைத்துக் கொள்வது பற்றி சர்க்கார் பரீட்சித்துப் பார்த்து, அந்த யோசனையைக் கைவிட்டு விட்டது"

என்று, சட்ட சபையில், உள்நாட்டு மந்திரி பண்டித கமலாபதி திரிபாதி என்பார் கூறியிருக்கிறார்.

காரணம் கேட்டபோது, 'போலீஸ் படையிலிருந்த பெண்கள் அடிக்கடி தங்களுக்குள் சண்டையிட்டுக் கொள்கின்றனர்' என்று கூறினாராம்!

"ஆண்கள் தங்களுக்குள் சண்டையிட்டுக் கொண்டார்கள் என்பதற்காக, எந்த இலாகாவையாவது சர்கார் மூடியதுண்டா?"

என்று, திருமதி சந்திரவதி என்ற உறுப்பினர் கேட்டபோது மந்திரி கூறியதாவது:—

"ஆண்கள் சண்டையிட்டுக் கொண்டால், போலீசார் அதை அடக்க முடியும்; ஆனால் பெண்கள் கோபப்பட்டு விட்டால், கடவுள்கூட எதும் செய்ய முடியாதே—வாயை மூடிக்கொண்டு வேடிக்கை பார்ப்பதைத் தவிர!"

ஜெய்ப்பூர் மாணவர் ஆர்ப்பாட்டம்

போலீசார் கண்ணீர்ப்புகைப் பிரயோகம்

இரு கல்லூரிகள் மூடப்பட்டன

ஜெய்ப்பூர், ஆக. 1—

ஜெய்ப்பூர் மாணவர்மீது போலீசார் கண்ணீர்ப் புகைப் பிரயோகம் செய்திருக்கின்றனர்.

நேற்றுவரை தடியடியாக இருந்த தண்டனை அடக்குமுறை, இன்று, கண்ணீர்ப்புகைப் பிரயோகக் கட்டத்தை அடைந்துள்ளது.

மாநிலப் பள்ளிகளில், பயிற்சிக் கட்டணம் உயர்த்தப்பட்டதற்கு எதிராக, மாணவர்கள் கடந்த சில நாட்களாக சர்க்கார் அலுவலகத்தின்முன் மறியல் நடத்தி வருவது தெரிந்ததே!

இதை ஒட்டி போலீசார் 144 தடைச் சட்டம் விதித்தனர். மாணவர்கள், தடையைமீறி ஆர்ப்பாட்டம் நடத்துகின்றனர்; அதன் விளைவாகக் கண்ணீர்ப் புகைப் பிரயோகம்; 100 மாணவர்கள் வசது; தொடர்ந்து இரு கல்லூரிகளை நிர்வாகிகள் மூடிவிட்டனர்.

பீகார் கோரிக்கை!

டில்லி இசையுமா?

பாட்னு, ஆக 1—

விவசாயிகளின் நலனைக் கருதி நியாய விலையில் தானியங்கள் கிடைக்கச் செய்ய, மத்திய அரசாங்கம் ஒரு விலை உத்திரவாதத் திட்டம் வகுக்கவேண்டும் என்று பீகார் அரசாங்கம் கோரியுள்ளது.

சென்னையின் சுறுசுறுப்பு

சென்னை, ஆக. 2—

பக்கிங்காம் கால்வாயை சென்னை துறைமுகத்துடன் இணைக்கும் பிரச்சினை பற்றி சென்னை சர்க்கார் இன்னும் தீவிரமாக ஆலோசித்து வருகிறதாம்.

தபால் ஊழியர் வேலை நிறுத்தம்

சர்க்கார் மேற்கொள்ளும் மாற்று ஏற்பாடுகள்

ஐதராபாத், ஆக. 1—

தபால்—தந்தி இலாகா ஊழியர்களின் வேலை நிறுத்தம் ஆகஸ்டு 8-ந் தேதி நள்ளிரவு முதல் துவங்க விருப்பதை முன்னிட்டு முன்கூட்டியே சர்க்கார் சில முன்னேற்பாடுகளைச் செய்கிறார்களாம்! அதாவது, ஆகஸ்ட 5-ந் தேதியிலிருந்தே, பதிவுத் தபால்கள், மணியார்டர்கள் இன்ஷ்யூர் கவர்கள் முதலியவற்றை தபால் நிலையங்களில் பெற்றுக்கொள்ள மாட்டார்கள் என்றும், சாதாரண தபால்கள் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும் என்றும் சர்க்கார் ஏற்பாடு செய்திருக்கிறதாம்!

மற்றும், மாநில சர்க்கார் ஊழியர்களுக்கு, தபால் நிலையங்களில்

வேதநாயகனுர் பெருமை

அண்ணு கருத்துரை

'பிரதாப முதலியார் சரித்திரம்' மலிவுப் பதிப்பு வெளியீட்டு விழா

மந்திரி பக்தவத்சலம், நீதிபதி பஷீர் அகமது சையித் ஆகியோர் கலந்துகொண்டனர்

சென்னை, ஆக. 2—

"வேதநாயகம் அவர்களின் பெருமையை உணர வேண்டுமானல் அவர் வாழ்ந்த காலத்தை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

"அவர் வாழ்ந்த நாட்கள், ஆங்கில அரசு அமைந்து நிலைத்துவிட்டிருந்த காலமாகும்; அந்த நாட்களில், அந்த அரசுக்கு எதிரான வேலைகளில் எவரும் அதிகமான ஈடுபாடு கொள்ளாத காலம்; அந்தக் காலத்தில்தான் வேதநாயகம் வாழ்ந்தார். அவர், தான் வாழ்ந்த காலத்தையும், தன் காலத்தில் வாழ்ந்த மக்களையும் நன்கு உணர்ந்து கொண்டிருந்தார்; அதனால்தான், இந்தக் காலத்தில் சிலர் கூறுகிறார்களே கேலியாக, அதுபோல, ஏகாதிபத்தியச் சோற்றுக்காக வேலை செய்துகொண்டிருந்த அவர், சர்க்காரில் வேலை செய்தாலும், தனது கல்வித் திறனை—அறிவாற்றலை, தமிழ் மக்களுக்காகவும் செலவிட முடியும் என்று கருதினுர்.

"நற்பண்புகள் பலவும் கொண்ட வேதநாயகம் அவர்கள் அடக்கமே உருவானவர். அந்தக் காலத்தில் அவர் விரும்பியிருந்தால், தமது செல்வத்தைப் பெருக்கிக் கொண்டிருக்க முடியும்; பளபளப்பான வாழ்வைப் பெற்றிருந்திருக்க முடியும்; ஆனல் அவர், தமிழ் நாட்டைப் பார்த்தார்; அந்த நாட்களிலிருந்த பளபளப்புகளை எதிர்நோக்காமல் மக்களை எதிர்நோக்கினுர். அத்தகைய தூய பண்பாளராயிருந்தார்.

"அறிவாற்றலும், அடக்கமும், நேர்மையும் மனிதனை முதலாவதாகவும், மகேசனை பின்னரும் மதிக்கிற நற்பண்பும் படைத்தவராக விளங்கியவர் வேதநாயகம் அவர்கள்"

—என்று, அண்ணு அவர்கள், நேற்று மாலை, செயிண்ட்மேரீஸ் மண்டபத்தில் நடைபெற்ற வேதநாயகம் பிள்ளை எழுதிய 'பிரதாப முதலியார் சரித்திரம்' என்ற நூலின் மலிவுப் பதிப்பு வெளியீட்டு விழாவில் பேசுகையில் குறிப்பிட்டார்; அவரது சொற்பொழிவின் முழு விவரம் பின்னர் வெளிவரும்.

கால்வாய் தகராறு

காலவரம்பு அதிகரிப்பு

புதுடில்லி, ஆக. 1—

பஞ்சாபில் உள்ள மூன்று கிழக்குப் பகுதி நதிகளின் தண்ணீரை இந்தியா பயன்படுத்திக்கொள்ள காலவரம்பை அறிவித்துள்ளது.

இன்னும் 5 ஆண்டுகளுக்குள் கால்வாய்த் தகராறு தீர்க்கப்பட வேண்டும் என்று இந்தியா வற்புறுத்தியுள்ளது.

இதை பாகிஸ்தானுக்கும், உலக பாங்கிக்கும் இந்தியா அறிவித்துள்ளது.

கண்டிப்பு

பஞ்சாபில் உள்ள கிழக்கு பகுதி நதிகளின் தண்ணீரை தனது உபயோகத்திற்குக் கொண்டுவரும் திட்டங்களுக்கு இந்தியா ஒரு பைசாகூட கொடுக்கவேண்டியதில்லை என்று இந்தியா உறுதியாகக் கருதுகிறது; ஆனல் இணைப்பு கால்வாய் திட்டங்களுக்கு மட்டும் உலக பாங்கி கூறியுள்ள யோசனையை இந்தியா ஏற்கத்தகும் என்று தெரிய வருகிறது.

இப்போதே பயிற்சி அளிக்க ஏற்பாடாகி யிருப்பதும் தெரிந்ததே!

★

நிகழ்ச்சி

நேற்று மாலை 6-30 மணியளவில், 'பிரதாப முதலியார் சரித்திரம்' 'சுகுணசுந்தரி' என்ற வேதநாயகம் பிள்ளை எழுதிய 'இரண்டு நாவல்களின் மலிவுப் பதிப்பு வெளியீட்டு விழா, செயின்ட்மேரிஸ் மண்டபத்தில் நடைபெற்றது.

விழாவிற்கு உள்நாட்டு மந்திரி பக்தவத்சலம் தலைமை தாங்கினுர்.

உயர் நீதிமன்ற நீதிபதி பஷீர் அகமது சையது அவர்கள் நூலை வெளியிட்டார்.

பின்னர், பி. ஸ்ரீ., பக்தவத்சலம் (மாணவர்), துரைநடராசன், ஆர். எஸ். பாண்டியன் ஆகியோர் சிறிது நேரம் பேசினர்.

இறுதியாக அண்ணு அவர்கள் பாராட்டுரை வழங்க, விழா இனிது முடிவுற்றது.

மலிவுப் பதிப்பினை, சக்தி காரியாலயத்தார் வெளியிட்டுள்ளனர்; அவர்கள் ஏற்கனவே பாரதியார் கவிதைகள், திருக்குறள் இவற்றை மலிவுப் பதிப்பாக வெளியிட்டுள்ளனர்; இது மூன்றாவதாகும்.

விழாவில், எண்ணற்ற தாய்மார்கள் உட்பட ஆயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்டனர். (ந. வீ.)

நம் நாடு
தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்

சென்னை 2—8—57 வெள்ளி

மக்களின் விருப்பத்தை உணராத உணவு அமைச்சர்!

உணவுப் பண்டங்களின் விலை நாளுக்குநாள் ஏறிக்கொண்டே போகிறது. குறிப்பாக, நம் மக்களின் மூல உணவுப் பொருளான அரிசியின் விலை மிகமிக உயர்ந்துவிட்டிருக்கின்றது.

அறுவடை காலங்களில் நீங்கலாக அரிசியின் விலை எப்பொழுதும் ஏறியே இருக்கின்றது. அறுவடை காலங்களிலும்கூட இறங்கித் தீரவேண்டிய அளவிற்கு அரிசியின் விலை இறங்குவது கிடையாது.

இந்த நிலையில், முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் பலனாக உணவு உற்பத்தி பெருகி இருக்கின்றது எனப் பொதுவாகவும் நெல் உற்பத்தி கூடி இருக்கின்றது எனக் குறிப்பாகவும் காங்கிரசு அமைச்சர்கள் கண்ணை மூடிக்கொண்டு கூறிவருகின்றனர். நெல் விளைச்சல் கூடி இருந்தால் விலை குறையாது இருக்கக் காரணம் என்ன என்ற கேள்விக்கு, விளைச்சல் கூடியிருக்கின்றது எனப் பெருமிதத்துடன் கூறிய அமைச்சர்கள், மவுனத்தைப் பதிலாக அளிக்கின்றனர்.

அதுவுமன்றி, 'ஏற்கனவே குறைவாக அரிசியை உண்டு வந்தவர்கள், முதல் திட்டத்தின் விளைவாக உயர்ந்துள்ள தங்கள் வருமானத்தின் காரணமாக, முன்னிலும் கூடுதலாக அரிசியை வாங்கி உண்ணத் தலைப்பட்டுவிட்டனர்; எனவே, அரிசியின் விலை ஏறிக்கொண்டே போகின்றது' என்கின்றனர். அதுபோலவே, 'இதற்குமுன்னர் சோளம், கேழ்வரகு போன்ற வேறு தானியங்களை மூல உணவுப் பொருளாகக் கொண்டு காலங் கழித்துவந்தவர்கள்கூட, திட்டத்தின் விளைவாகப் பெற்றுள்ள வருவாயைக் கொண்டு, அரிசியை மட்டுமே உணவாகக் கொள்ளப் பழகிவிட்டனர்; எனவே, அரிசியின் விலை கூடிக்கொண்டே போகின்றது' என்றும் அமைச்சர்கள் நியாயம் பேசுகின்றனர்.

இவ்வாறு பொருத்தமில்லாமல் பேசுகின்ற அளவுடனும் அமைச்சர்கள் திருப்திகொண்டு விடுவதில்லை. வேறு திருப்திகரமான பதிலைத் தேடிடவும் முனைகின்றனர்.

அதிக நிலம் படைத்தவர்கள் அதிகமான இலாபங் கருதி உணவுப் பண்டங்களை முடக்கி விடுகின்றனர் என்றும், பெரிய சிறிய வியாபாரிகள் இலாப நோக்கத்துடன் குறைந்த விலையில் கொள்முதல் செய்த உணவு தானியங்களைப் பதுக்கி விட்டு, அதன்மூலம் செயற்கை விலை ஏற்றத்தைத் திணிக்கின்றனர் என்றும் காங்கிரசு அமைச்சர்கள் மேலும் விளக்கமளித்த வண்ணம் உள்ளனர்.

மக்கள் சபையில் நடைபெற்ற உணவு விவசாய மானியத்தின் மீது நடைபெற்ற விவாதத்தின் பொழுது, உணவு அமைச்சர் ஜெயின், 'விலை உயர்வு எனப் பொதுமக்கள் கூறுவது மிகைபடக் கூறுவதாகும் என ஒரு புதுக் கதை படித்திருக்கின்றார். 'விவசாயத்திற்கு இன்றியமையாத் தேவையாக உள்ள பொருட்களின் விலை ஏற்றமே, உணவுப் பண்டங்களின் விலை ஏற்றத்திற்குக் காரணம்' என்றும் அவர் அறிவித்துள்ளார்.

அதுவுமன்றி, 'வியாபாரிகளை விட்டேனு பார்' என்றும் மத்திய உணவு அமைச்சர்கள் வழக்கமாக வெளியிட்டுவந்த எச்சரிக்கையை, இவரும் வியாபாரிகளுக்கு விட்டிருக்கின்றார். இந்த எச்சரிக்கை அளவுடன், மக்கள் உயிரைப் பணமாக்கி வரும் உணவு தானியத் துறையில் பொருளீட்டும் பெரும் வியாபாரிகள், தங்கள் சமூக விரோதச் செயலைக் கைவிட்டு விடுவர் என்று அமைச்சர் நம்புகிறார். அதே நம்பிக்கையைப் பொதுமக்களும் கொள்ள வேண்டும் என்றும் அவர் எதிர்பார்க்கின்றார்.

அமைச்சர் ஜெயின், கூட்டுறவு விவசாயத்தின் மூலம்தான் உணவு உற்பத்தி பெருகக் கூடும் என்றும் நம்பிக்கை தெரிவித்துள்ளார். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் கூட்டுறவு விவசாய முறைக்கு சிறப்பளித்திருப்பதை, அம்முறையில் தனக்கேற்பட்டுள்ள நம்பிக்கைக்குச் சாதகமாகவும் அவர் எடுத்துக் காட்டியுள்ளார்.

சிறு சிறு நிலம் படைத்தவர்கள் தனித்தனியாகவும்பயிரிடுவதின் மூலம் ஏற்படக்கூடிய விளைச்சலைவிட, அவர்கள் அனைவரும்கூடி கூட்டுறவுமுறையில் அவர்களுடைய மொத்த நிலப்பரப்பைப் பயிரிடுவதின் மூலம் அதிகமான விளைச்சலைப் பெறமுடியும் என அமைச்சர் ஜெயின் அறிவித்திருப்பது, கூட்டுறவு விவசாய முறைமீதே மக்களுக்கு அவநம்பிக்கை ஏற்படச் செய்வதாக இருக்கின்றது.

உணவுப் பண்டங்களின் உற்பத்தியை எப்படி பெருக்குவது, மக்களின் உணவுத் தேவையை எப்படி பூர்த்தி செய்வது, உணவு மண்டலங்களை உருவாக்கி இலட்சியத்தில் வெற்றி காண்பதா, பங்கீடு முறையை மீண்டும் நடைமுறைக்குக் கொண்டு வருவதா, அறுவடை காலங்களில் உணவு தானியங்களை அரசாங்கமே கொள்முதல் செய்து விநியோகிப்பதா என்பது பற்றி எல்லாம் அறிந்துகொள்ள வேண்டிய அவசியமோ, அக்கறையோ பொது மக்களுக்குக் கிடையாது; இருக்கவும் முடியாது; இருந்துத் தீரவேண்டும் என்ற கட்டாயமும் இல்லை.

பொதுமக்கள் விரும்புவது எல்லாம், தங்களால் வாங்கி வயிரார உண்ணக்கூடிய விலையில் தங்களுக்கு நல்ல அரிசியும், மற்ற உணவுப பண்டங்களும் வேண்டும் என்பதேயாகும். அந்த ஒன்றைத் தான் காங்கிரஸ் ஆட்சியாளர்களிடமிருந்து பொது மக்கள் ஆவலோடு எதிர்பார்க்கின்றனர். அந்த விருப்பத்தைக் குறைந்த அளவிலாவது நிறைவேற்றுகின்ற ஆட்சியைத்தான் பொது மக்கள் பாராட்டவும் செய்வர். ஆனால் உணவு அமைச்சர் ஜெயினின் உரை, மக்களின் மேற்படி விருப்பத்தைப் பூர்த்திசெய்வதாக இல்லை. மக்களின் அவ்விருப்பத்தை அவர் உணர்ந்திருக்கின்றார் என்பதைக் காட்டுவதாகக்கூட, அமைச்சர் ஜெயினின் பேச்சு அமைந்திருக்கவில்லை.

அணிவகுப்பும் ஆடம்பரமும் ஏன்?

வெட்டிப் பேச்சுக்களால் பயன் என்ன?

ஏழைகளுக்குச் சோறு போட்டால் விழா சிறக்காதா?

1857 கொண்டாட்டம் பற்றி ஒருவரின் குமுறல்

"ஆகஸ்டு 15, 16-ந் தேதிகளில் 1857-ம் ஆண்டு எழுச்சியின் நூற்றாண்டு விழாக் கொண்டாடுவதற்காக சர்க்கார், நிகழ்ச்சி நிரலைத் தயாரித்துக் கொண்டிருப்பதாக செய்தி ஒன்று கூறுகிறது. ஆனால் ஏன் இந்த திட்டம் எல்லாம்? ஏற்கனவே, இராணுவ அணிவகுப்புகள், மந்திரிகளுக்கு வரவேற்புகள் போன்ற பழக்கங்கள்தான் இருந்துவருகின்றன; போதாதற்கு, எவருக்கும் பயன்படாத வெட்டிப் பேச்சுக்கள் வேறு இருக்கவே இருக்கின்றன; இந்தப் பேச்சுக்கள் எவருக்கும் பயன்படுவதில்லை என்பதோடு, கேட்டமாத்திரத்திலேயே மக்கள் மறந்தும்விடுகிறார்கள்.

"எனவே, இந்த அர்த்தமில்லாத வெட்டித்தனமான ஆடம்பரங்களுக்காகப் பணத்தைப் பாழ்படுத்துவதை விடுத்து, அந்தப் பணத்தை ஏழை எளியோருக்கு உணவு, துணி வழங்குவதற்குச் செலவிட்டால் எவ்வளவு நன்றாயிருக்கும், அந்த நினைவு கூறற்குரிய நன்னாளில்! வயோதிகருக்கு உபகாரச் சம்பளம் தருவது என்று அறிவித்தால் எத்துணை நலமாயிருக்கும்! ஆசிரியர்கள் ஓய்வு பெறும் வயதையும் அதிகரித்து, அவர்களுக்குச் சம்பளத்தையும் உயர்த்தினால் எவ்வளவு நன்றாயிருக்கும்!

"இது போன்ற மனிதாபிமானமுள்ள சில நல்ல காரியங்களைச் செய்வதுதான், அணிவகுப்புகள், சொற்பொழிவுகள், இதர 'தமாஷா'க்களைவிட, அந்த நாளுக்குரிய தகுதியான சிறப்பாக இருக்கும்.

"ஆனால் காந்தியாரின் காலம் மலையேறிவிட்டது. ஏழைகளுக்கு — எளியோருக்குப் பாடுபட எவருமே இல்லை! மக்களுக்காகப் பாடுபடக் கூடிய பெருந் தலைவர்கள் இல்லவே இல்லை! ஏனெனில், நமது தலைவர்கள் பேரியவர்கள்தான்; ஆனால் அவரவர்கள் அரசர்களுடன் உல்லாச நடைபோடுகின்றனரே தவிர, சாதாரண மக்களின் தொடர்பை இழந்து விட்டனர்"

என்று, பம்பாயைச் சேர்ந்த 'டாக்சின்' என்ற ஒரு தோழர் 'டைம்ஸ் ஆப் இந்தியா' 29—7—57-ந் தேதிய இதழில் கடிதம் ஒன்று எழுதியுள்ளார்.

தாமதமாக வரத் தவறாத இரயில்!

இரயில்கள் குறித்தநேரத்தில் போய்ச் சேருவதற்கான முயற்சி தீவிரமாகி வருவதாகவும், இதற்காக சர்க்கார் இடைவிடாது பாடுபட்டு வருவதாகவும் இரயில்வே உதவி மந்திரி ஷா நவாஸ்கான், மக்கள்சபையில் ஒரு உறுப்பினர், 'குறித்தநேர முயற்சி என்றீர்களே, அது என்ன?' என்று கேட்டபோது தெரிவித்தார்.

பெரோஸ் காந்தி (காங்):— 'கடந்த பத்து ஆண்டுக்காலமாக டெல்லி—சென்னை கிராண்ட் டிரங்க் எக்ஸ்பிரஸ் வண்டி தாமதமாகத்தான் ஓடிக்கொண்டிருக்கிறது. ஆனால் இதே பதிலைத் தான் சர்க்கார் தந்துவருகிறது. வேறு ஏதாவது புதிய விளக்கம் தருமாறு இரயில்வே போர்டாரை மந்திரி கேட்பாரா?' என்று கேட்டபோது, சபை சிரித்தது!

உடனே கோபப்பட்ட மந்திரி செகசீவன்ராம், 'கடந்த பத்து ஆண்டுக்காலமாக, கிராண்ட் டிரங்க் வண்டி தாமதமாகச் செல்வதாக நான் நினைக்கவில்லை' என்று கூறினாராம்!

உடனே தோழர் காந்தி, 'கனம் மந்திரி அவர்கள் 1947-லிருந்து இரயில்வே மந்திரியாக இருக்கவில்லை; ஒரு மாதத்தில் 20 நாள் இந்த வண்டி, குறித்த நேரத்திற்கு ஓடுவதில்லை' என்று இடித்துரைத்தார்!

ரூ. 17 கோடி இலாபம்

உலக பாங்கி அறிக்கை

1956—57-ம் ஆண்டில் உலக பாங்கிக்கு, ரூ. 17·13 கோடி 3·6 கோடி டாலர்) நிகரவருமானம் கிடைத்ததாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

சென்ற ஆண்டில் 2·9 கோடி டாலர்தான் கிடைத்தது என்றும் தெரிய வருகிறது.

பாங்கியின் இருப்பு 28·8 கோடி டாலர் என்றும், 15 நாடுகளுக்கு 20 கடன்கள் தரப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

தேய்ந்துவரும் காங்கிரஸ் இறுதியின் எல்லைக்கோட்டைத்தாண்டிவிட்டது

மக்களை இனியும் ஏமாற்றமுடியாது

வளர்ந்துவரும் தி. மு. கழகத்தை இனிக் குறை கூறிப் பயனில்லை

சென்னை—சூளை தி. மு. கழகப் பொதுக்கூட்டத்தில் கி. மனோகரன், சத்தியவாணிமுத்து விளக்கம்

சென்னை, ஆக. 1—

30—7—57-ல் 17-வது வட்ட தி. மு. கழகச் சார்பில், ஓர் பொதுக்கூட்டம் சூளை—அஷ்டபுஜம் தெருவில் நடைபெற்றது. தோழர்கள் பாலன் முன்மொழிய ஜெயராமன் வழிமொழிய தோழர் கன்னியப்பன் கூட்டத்திற்குத் தலைமை தாங்கினார்.

தலைவர் தனது முன்னுரையில் கூட்டத்தின் நோக்கத்தை எடுத்துரைத்தார்.

அடுத்துத் தோழர் ஆர். ஜார்ஜ் அவர்கள் பேசுகையில், தி.மு. கழகத்தின் வளர்ச்சியை எடுத்துரைத்து, மக்களின் ஆதரவை இழந்துவரும் எதிரிகளுக்கு இப்போது நம்மீது எரிச்சல்தான் ஏற்படும் என்றும் ஆக்க வேலையில் ஈடுபட்ட தி. மு. கழகத்தினர் அவர்களின் ஏசல்களைப் பற்றிக் கவலைப்படக்கூடாது என்றும் குறிப்பிட்டார். எதிர்க் கட்சிகள் கூறும் நல்ல கருத்துக்களுக்கு ஆளும் கட்சியினர் மதிப்பளிப்பதே சனநாயகப் பண்பாகும் என்றும் வலியுறுத்தினார்.

அடுத்துத் தோழர் வி. எஸ். கோவிந்தராசன் அவர்கள் பேசுகையில் இந்த நாட்டில் எந்தக் கட்சியும், குறுகிய காலத்தில் தி. மு. கழகம் அடைந்துள்ள வளர்ச்சியை அடைந்ததில்லை என்பதை விளக்கி, ஆளும் கட்சியினர் தி.மு கழகத்தின் சமுதாய—பொருளாதார—அரசியல் திட்டங்களை ஆராய்ந்து, அதைப்பற்றிக் குறையிருப்பின் மக்களிடம் கூற முற்படுவதுதான் நல்ல சனநாயகப் பண்பாகும் என்று சுட்டிக்காட்டினார்.

அடுத்துத் தோழியர் சத்தியவாணிமுத்து எம்.எல்.ஏ. அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

"காங்கிரஸ்காரர்களில் சிலர், 'தி. மு. கழகத்திற்கு ஓட்டுப் போட்டீர்களே, அவர்கள் என்ன செய்துவிட்டார்கள்?' என்று, கூட்டம் போட்டுப் பொதுமக்களைக் கேட்டனராம்; நான் சட்டசபைக்குச் சென்றே 4 மாத காலம்தான் ஆகிறது; தொகுதி மக்களுக்கு இந்தக் கால அளவுக்குள் ஒன்றும் செய்யவில்லை என்று முடிவு செய்வது அறிவுடைமையாகாது; இப்படிப் பேசுவதால் எதிர்க் கட்சியினரை ஒழித்துவிடலாம் என்று கருதுவது அரசியல் அநாகரீகமாகும்.

"நான், ஸ்தலஸ்தாபன அமைச்சர் லூர்து அம்மையார் அவர்களை அழைத்துவந்து என் தொகுதியைக் காட்டினேன்; பல குறைகளை எடுத்துரைத்தேன்; அவர்களும் ஆவன செய்வதாக கூறியுள்ளார். இன்னும் 5 ஆண்டுகள் இருக்கும்போது ஏன் இதற்குள் காங்கிரஸ்காரர்கள் அவசரப்படுகிறார்கள் என்று தெரியவில்லை. நாங்கள் மக்கள் குறைகளை எடுத்துச்சொல்லுவோம்; ஆட்சியாளரை வற்புறுத்துவோம். அப்போதும் அவர்கள் செய்ய முன்வராவிட்டால் மீண்டும் மக்களிடமே நடந்ததை எடுத்துச்சொல்லுவோம்.

"இன்று நாங்கள் சட்டசபையில் இருப்பதால் காரியங்கள் சரிவர நடைபெறுகிறது; வெளியிலும்கூட நாங்கள் நல்ல அரசியல் பண்பை வளர்க்கும் துறையில் ஈடுபட்டுள்ளோம்."

அடுத்து, தோழர் நாஞ்சில் கி. மனோகரன் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"தி. மு. கழகம் வளர்ந்துள்ளதற்குக் காரணம் என்ன என்ற ஆராய்ச்சியில் ஈடுபட்டால், நிலைமை புரியும்—தெளிவு ஏற்படும். 'காங்கிரஸ் பழைய கட்சி—60 ஆண்டுகளாக உள்ள கட்சி—எவராலும் அசைக்கமுடியாத செல்வாக்கு பெற்ற கட்சி' என்ற அவர்கள் கொண்டிருந்த அகம்பாவமே, அவர்களின் செல்வாக்கு குறைந்து வருவதற்குப் போதிய காரணமாகும். இதை உணராமல் வளரும் எதிர்க்கட்சியைப் பார்த்துப் பொறுமைப்படுவதில் பயனில்லை.

"இன்று 'தி. மு. கழகம் வசந்தமண்டபத்தில் கொலுவீற்

(4-ம் பக்கம் பார்க்க)

'உதய சூரியன்' படிப்பகத் திறப்பு விழா

சேலம்-செவ்வாய்ப்பேட்டையில் கழகத் தோழர்கள் விளக்கம்

சேலம், ஜூலை 29—

28—7—57 மாலை செவ்வாய்ப் பேட்டை மீனாட்சி அம்மன் கோவிலருகில் உள்ள மைதானத்தில் தி. மு. கழக உயதசூரியன் படிப்பகத் திறப்பு விழா தோழர் ந. பிச்சைமுத்து தலைமையில் நடைபெற்றது. உதய சூரியன் படிப்பகம் திறக்கவேண்டிய அவசியத்தை அவர் விளக்கினார்.

சேலம் நகர தி. மு. கழகச் செயலாளர் இ. ஆர். கிருஷ்ணன் பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

"மத்தியப் பேரரசு புதியதாக 112 வரிகளை விதித்தது; ஜனநாயக அரசாங்கமாக இருந்தால் தேர்தலுக்கு முன்பே, 'புதிய வரிகள் விதிக்கப் போகிறோம்' என்று கூறி இருக்கவேண்டும். 'மக்களுடைய குறைகளைப் போக்குகிறோம்; ஏழைப் பங்காளர்கள் நாங்கள்' என்றெல்லாம் தேர்தல் காலத்தில் கூறி மக்களிடம் ஓட்டு கேட்டார்கள். பாராளுமன்றத்தில் தங்களுக்குப் பெரும் எண்ணிக்கை என்ற காரணத்தால், பதவியேற்றவுடனேயே புதியதாக 112 வரிகளை இந்திய நிதி அமைச்சர் விதித்தார்; இதை நாங்கள் எதிர்க்கிறோம்.

"தி.மு. கழகம் சட்டசபைக்குச் சென்று என்ன செய்தது என்று சிலர் கேட்கிறார்கள். தேர்தல் சமயத்தில் சேலம் நகர தொகுதியில் போட்டியிட்ட தி. மு. கழகப் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் பல கட்ட விற்பனை வரிக்குப் பதில் ஒருமுனை வரியை தாம் ஆதரிப்பதாகக் கூறினார். இவ்வாறு கூறியவுடன் மக்களும், வியாபாரிகளும் அவருக்கு ஆதரவு தருவதைக் கண்டதும் காங்கிரஸ்காரர்களும், மந்திரிகளும் இந்த வட்டாரத்தில், வியாபாரிகளின் விற்பனை வரிக் கஷ்டத்தைத்தாங்கள் அறிந்திருப்பதாகவும், அதைப் போக்கி ஒருமுனை வரி கொண்டு வருவதாகவும் கூறினார்கள். இந்தத் தொகுதியில் வெற்றி பெற்ற காங்கிரஸ் எம்.எல்.ஏ., விற்பனை வரிக் கஷ்டத்தைப் பற்றி சட்டசபையில் பேசவில்லை. விற்பனை வரிக் கஷ்டங்களைப் பற்றியும், ஒருமுனை வரி விதிக்கவேண்டிய அவசியத்தைப் பற்றியும், உணவுப் பொருள்களுக்கு விற்பனை வரியிலிருந்து விதிவிலக்கு அளிக்கவேண்டுமென்றும் சட்டசபையில் கழக உறுப்பினர்கள் கோரியுள்ளனர். தி. மு. கழக எம்.எல்.ஏ.-க்கள் என்ன பேசுகிறார்கள் என்பதை அவ்வப்போது பத்திரிகைகளைப் பார்த்து மக்கள் தெரிந்து கொள்ள வேண்டும்."

பின்னர், தோழர் சிற்றுளி ஏ. சுப்பிரமணியம் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"தி. மு. கழகத்தினர் நாசக்காரர்கள் என அமைச்சர் சுப்பிரமணியம் குறிப்பிட்டார். தி. மு. கழகத்தினர் எந்த நாசவேலையையும் செய்யவில்லை. காங்கிரஸ்காரர்கள்தான் 1942-ல் நாசவேலை செய்தார்கள். நாணயமான அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்கள் தி. மு. கழகத்தினர்."

உதய சூரியன் படிப்பகத்தைத் திறந்துவைத்துப் பேசுகையில் முகவை ஆர். எஸ். பாண்டியன் குறிப்பிட்டதாவது:—

"உதய சூரியன் சின்னத்தை தேர்தல் சின்னமாக வைத்துத் தி. மு. கழகம் போட்டியிட்டது. அந்த உதய சூரியன் பெயரில் தமிழ் நாட்டில் பல இடங்களில் படிப்பகங்கள் திறக்கப்பட்டு வருகின்றன. இம்மாதிரி படிப்பகங்கள் நாட்டில் ஏற்படவேண்டியது அவசியம்.

"ஐந்தாண்டுத் திட்டம் என்று சொல்லி தென்னாட்டை வடநாடு சுரண்டுகிறது; ஐந்தாண்டுத் திட்டத்தால் தென்னாட்டிற்கு நன்மைகள் இல்லை. சென்ற ஐந்தாண்டுத் திட்டத்தைப் பார்த்தாலே இது தெரியும். ஐந்தாண்டுத் திட்டத்தின் பெயரால் வடநாடு செழிப்படைகிறது; நம் நாட்டு வரிப் பணம் வடநாட்டில் பெரும் பகுதி செலவழிக்கப்படுகிறது; தென்னாடு புறக்கணிக்கப்படுகிறது. அதனால்தான் வடநாட்டுத் தொடர்பிலிருந்து திராவிட நாடு பிரிக்கப்படவேண்டும் என்று கூறுகிறோம்."

காஞ்சிபுரம் தொகுதி பொது நல மாநாடு

காஞ்சிபுரம் தொகுதியின் முன்னேற்றம் குறித்து ஆலோசித்து ஆவன செய்வதற்காக, பொது நல மாநாடு, காஞ்சிபுரம் தொகுதியில் 159 நெ. தண்டலம் கிராமத்தில் 5—8—57 மாலை நடைபெற ஏற்பாடாகி இருக்கிறது.

சென்னை மாநில முதலமைச்சர் காமராசர் மேற்படி மாநாட்டில் கலந்துகொள்கிறார்.

காஞ்சிபுரம் தொகுதியின் சீர்கேடுகள் நீங்குவதற்காக, முதலமைச்சரிடம் நிலைமைகளை விளக்கிக் கூறுவதற்கும், மனுக்கள் தருவதற்கும், தொகுதியிலுள்ள கிராமத் தலைவர்களும், பொது நலத் தொண்டர்களும் மேற்படி மாநாட்டுக்கு வர வேண்டுகிறேன்.

மாநாடு, மாலை 5 மணியிலிருந்து இரவு 8 மணி வரையில் நடைபெறும்.

முதலமைச்சரிடம் கிராமத் தலைவர்கள் மனுக்கள் தருவதாக இருந்தால், மேற்படி மனுவின் பிரதி ஒன்றினை, முன்னதாகவே எனக்கு அனுப்பக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

மேற்படி மாநாடு, நமது தொகுதியின் பொது நலனைக் கருதி நடத்தப்படுவதால், எல்லாக் கிராமங்களிலிருந்தும் அன்பர்கள் தவறாது வந்திருந்து பயனடைய வேண்டுகிறேன்.

குறிப்பு:— பாரூர் பிர்க்கா புள்ளலூர் கிராமம் அடுத்த 2 மைல் தொலைவில் 159 நெ. தண்டலம் கிராமம் உள்ளது.

அன்பன்,

அண்ணாதுரை, M.L.A.

அரசியல் நோக்கம் கிடையாதாம்!

ஆப்கனுக்குப் பொருளாதார உதவியளிக்க ரஷ்யா திட்டம்

மாஸ்கோ, ஆக. 1—

எவ்வித அரசியல் அல்லது வேறுவித நிபந்தனையும் இல்லாமல், ஆப்கன் பொருளாதார முன்னேற்றத்திற்காகத் தொழில் நுணுக்கப் பயிற்சியும், பொருளாதார உதவியும் அளிக்க ரஷ்யா முன்வந்துள்ளதாம்!

மின்சார இலாகா ஊழியர் குறைகள்

சென்னை, ஜூலை 31—

சமீபத்தில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபாடு கொண்ட மின்சார ஊழியர்கள் மீது அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாம்!

இன்றுவரை வாக்களிக்கப்பட்ட சலுகைகள் எதும் அமுலுக்குக் கொண்டுவரப்படவில்லையாம்!

இந்த இரண்டு குறைகளையும் போக்க அரசாங்கம் முன்வராவிட்டால் ஆகஸ்டு 15-ந் தேதி முதல் எவ்வித முன்னறிப்பும் இல்லாமல் வேலைநிறுத்தம் செய்வதென அரசாங்க மின்சார இலாகா ஊழியர் சங்கம் முடிவு செய்துள்ளது.

29-ந் தேதியன்று நடைபெற்ற மத்தியக் குழுக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

நல்ல சூழ்நிலை ஏற்படவேண்டும் என்ற நோக்கத்துடன் கடந்த 27—6—57-ல் வேலைநிறுத்தம் செய்யவில்லை என்பதும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

குளித்தலை வட்ட விவசாயிகள் முன்னேற்ற சங்கம்

14—7—57 காலை 10 மணிக்கு குளித்தலை வட்ட விவசாயிகள் முன்னேற்றச் சங்கத்தின் பொது உறுப்பினர்கள் கூட்டம் குளித்தலையைச் சேர்ந்த நங்கவரத்தில் நடைபெற்றபோது, நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—

தலைவர்: தி. வீ. முத்துகிருஷ்ணன்; துணைத் தலைவர்: சு. சண்முகம்; செயலாளர்: க. முத்து; பொருளாளர்: க. கருப்பண்ணன்; செயற்குழு உறுப்பினர்கள்: அ. மூக்கன், ச. பரிமணம், அ. காளி, இரா. மொட்டையாண்டி, பி. மருதமுத்து, ம. பொன்னன், வை. தங்கவேலு.

ஆசிரியருக்குக் கடிதம்:

வடக்கு வாழ்கிறது - தெற்கு தேய்கிறது!

ஐயா,

சென்ற 28—7—57-ல், கீழ்க்கரையில் நடைபெற்றகம்யூனிஸ்டுக் கட்சி பொதுக்கூட்டத்தில், தமிழ் நாடு கம்யூனிஸ்டுக் கட்சியின் தலைவர்களில் ஒருவரான தோழர் பி. இராமமூர்த்தி அவர்கள் பேசுகையில்,

"பாகிஸ்தானிலிருந்து வந்த இலட்சக்கணக்கான அகதிகளுக்கு வாழ வழி செய்து கொடுத்த சர்க்கார், இலங்கையிலிருந்து நாடுகடத்தப்பட்டு வருகின்ற தமிழ்நாட்டு அகதிகளுக்கு எவ்வித சலுகையும் செய்துகொடுக்காதிருப்பது மிக மிக வருந்தத்தக்கது"

என்று கூறிவிட்டு மேலும் பேசுகையில், 'இலங்கையிலிருந்து நாடு கடத்தப்பட்ட அகதிகளுக்கு நல்வாழ்வு தேடித் தர இப்பகுதியில் ஒரு இயக்கம் தோற்றுவிக்கப்பட்டிருப்பதாகக் கேள்வியுற்று மகிழ்ச்சி அடைகிறேன்'—என்றும் கூறினார்.

இதிலிருந்து, 'வடக்காவது—தெற்காவது; எல்லாம் வெறும் பேச்சு' என்று கூறிவந்த கம்யூனிஸ்டுத் தோழர்கள் வடநாட்டு ஆட்சியால் வாழவழியின்றி தவிக்கும் தென்னாட்டு மக்களின் துயர நிலையை நேரிலே கண்டு, பாகிஸ்தானிலிருந்து வந்த வடநாட்டு அகதிகளுக்கு ஒரு நீதியும், இலங்கையிலிருந்துவந்த தென்னாட்டு அகதிகளுக்கு ஒரு நீதியும் வழங்கி வரும் டில்லி அரசின் போக்கைப் புரிந்துகொண்டு மனம்வருந்தி, 'வடக்கு வாழ்கிறது—தெற்கு தேய்கிறது' என்ற தி. மு. கழகத்தின் உரிமைக் குரலை சொல்லாமல் சொல்லவேண்டிய நிலைமைக்கு ஆளாகிறார்கள் என்பது தெளிவாகத் தெரிகிறது.

வளர்க, தி. மு. கழகத்தின் உரிமை முழக்கம்!

எம். சுல்தான்,
கீழக்கரை.

சுட்டிக்காட்டினோம்- உணருகின்றனர்!

புழலேரி, சோழவரம் ஏரிகளின் பாசனத்தின்கீழ் உள்ள ஆயக்கட்டில் 1,000 ஏக்கர் நிலத்தில் பயிர்செய்யத்தண்ணீர் விடும்படி அரசாங்கம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

புழலேரி, சோழவரம் ஏரிகளிலிருந்து குறைந்தபட்சம் 5 கோடி கன அடி தண்ணீர் விடுவதற்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

கரூர் ஆலைத் தொழிலாளர் சங்கம்

நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்

கரூர், ஜூலை 31—

கரூர் ஆலைத் தொழிலாளர் சங்கத்தின் நிர்வாகக் குழுக் கூட்டம் 27—7—57-ல், திரு. பி. சேது அவர்கள் தலைமையில் நடைபெற்றுள்ளது.

மறைந்த டாக்டர் பி. வரதராசுலுவின் பிரிவால் வருந்தும் உற்றார் உறவினருக்கு அனுதாபம் தெரிவித்தும்; சென்னை தொழில் அமைச்சரின் முதலாளி - தொழிலாளி உறவு பற்றிக் கூறிய திட்டத்தை வரவேற்றும்; 26-1-57-ல் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை ஆலை அதிபர்கள் ஏற்றுக் கொள்ள தொழில் அமைச்சர் ஈடுபட வேண்டும் என்றும், கரூர் ஆலைத் தொழிலாளர் சிற்றுண்டி சாலையை சீர்திருத்த வேண்டும் என்றும்; தோழர்கள் சாமியப்பன், மாரிசாமி இவர்களை குழுவின் உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்வது என்றும்; சங்கத்தின் வரவு—செலவுத் திட்டத்தை அடுத்த கூட்டத்தில் பரிசீலனை செய்வதென்றும் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

காங்கிரஸ் ஆட்சியில் நிம்மதி ஏது?

வரி போடுவதைத் தவிர என்ன செய்வார்கள்?

துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் தெளிவுரை

சென்னை, ஆக. 1—

சென்னை 8-வது வட்ட தி. மு. கழகச் சார்பில், 26—7—57-ல், பெத்துநாய்க்கன் பேட்டை சக்கரை செட்டித் தெருவில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது; தோழர் சாந்தலிங்கம் முன்மொழிய, தோழர் இராசவேலு வழிமொழிய தோழர் கே. எஸ். தினகரன் கூட்டத்திற்குத் தலைமை வகித்தார்.

தலைவர் முன்னுரையில் தி. மு. கழகக் கூட்டம் மாற்றுக் கட்சியினரை குறைகூறும் நோக்கத்துடன் கூட்டப்படுவதல்ல என்றும், கழகத்தின் இலட்சியங்களைப் பொதுமக்களுக்கு விளக்குவதற்கே கூட்டப்படுகிறதென்றும் கூறினார்.

அடுத்து, தோழர் சி. ஆர். பாலசுந்தரம் அவர்கள் பேசுகையில், நல்ல சனநாயக வளர்ச்சிக்கு எதிர்க்கட்சிகள் மிக்க அவசியம் என்பதை ஆளும் கட்சியினர் உணர வேண்டும் என்றும், கேலி பேசுவதைவிட்டு பொறுப்புடன் இனி நடந்துகொள்ள வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

பின்னர், துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன் அவர்கள் பேசியதாவது:—

"ஆட்சியாளரைத் தட்டிக் கேட்டு, நல்லாட்சிக்கான அரிய யோசனைகளைக் கூறும் அளவிற்கு தி. மு. கழகம் வளர்ந்துள்ளது. டில்லியிலும் வடநாட்டிலும் இப்போது நம்மைப் பற்றிய கவலை ஓரளவுக்கு ஏற்பட்டுள்ளது என்றாலும் மிகையாகாது. சட்டசபையில் தி. மு. கழகம் என்ன செய்துள்ளது என்பதைப் பத்திரிகையில் பார்த்திருப்பீர்கள்; எந்த அளவுக்கு அவர்களின் அறிவுரைகளை ஆட்சியாளர் பயன்படுத்திக் கொள்கிறார்கள் என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். இந்த வளர்ச்சியைக் கண்டு பொறாமைப்படுகிறவர்கள் நிச்சயமாகக் கேலிதான் பேசுவார்கள். வேறு என்ன பேசுவார்கள்? 'வரியைக் குறைத்துவிட்டோம்' என்று பேசுவார்களா? இவர்கள் ஆட்சிக்கு வந்தவுடனே வரிகளை உயர்த்திவிட்டார்கள்; விலைவாசிகள் உயர்ந்துவிட்டன; மக்களின் வெறுப்புணர்ச்சியைப் பெற்றுவிட்டனர். இப்படி வரி போடுவதைவிட தனிப்பட்ட முதலாளிகள் நடத்திவரும் தொழில்களை அரசாங்கம் ஏற்று நடத்தினால் எவ்வளவு வருமானம் கிடைக்கும்? ஏன் இதனைச் செய்யக் கூடாது? எனவே, இந்த ஆட்சி இருக்கும்வரை மக்களுக்கு நிம்மதி இருக்காது; நாட்டில் முன்னேற்றம் ஏற்படாது—வாழ்க்கையில் இன்பம் இருக்காது."

தலைவர் முடிவுரைக்குப் பின் செயலாளர் நன்றிகூற கூட்டம் இரவு 9-30 மணிக்கு முடிவுற்றது.

57-58-ம் ஆண்டு அபிவிருத்திசெலவு

நமது மாநிலத்தில் ரூ. 34 கோடிதான்!

சென்னை, ஜூலை 31—

மாநிலச் சீரமைப்புக்குப் பின் சென்னை மாநிலத்திற்கு இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் மொத்தம் சுமார் ரூ. 152 கோடிதான் ஒதுக்கப்பட்டது என்பது நினைவிருக்கலாம்.

இந்த ஆண்டிற்கென ஒதுக்க உத்தேசித்திருந்த தொகை ரூ. 32 கோடி; இத்தொகை இப்பொழுது ரூ. 34 கோடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இத்தொகையில் நீர்ப்பாசன வசதிகளுக்காகவும், மின்சார வசதிகளுக்காகவும் ரூ. 15 கோடி செலவிடப்படும்.

1957-58-ம் ஆண்டிற்கான திட்டங்கள் குறித்துத் திட்டக் குழுவுடனும், டெல்லி சர்க்காருடனும் கலந்து ஆலோசித்தபிறகு இத்தொகை சென்னைக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

இத்தொகையில் விவசாயம், சமுதாய வளர்ச்சி ஆகியவைகளுக்காக ரூ. 6 கோடியும், பாசனம், மின்சார வசதிகளுக்கு ரூ. 15 கோடியும் ஒதுக்கப்பட்டுள்ளது. மற்றும் தொழில்களுக்கு என ரூ. 3 கோடியே 15 இலட்சமும், சாலைகள் அமைக்க ரூ. 1 கோடியே 27 இலட்சமும், சமூக சேவைகளுக்காக ரூ. 7 கோடியே 70 இலட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளது.

முதல் ஐந்தாண்டுத் திட்டமான 1956—57-ம் ஆண்டில் இம் மாநிலத்திற்கென சுமார் ரூ. 30 கோடி செலவு செய்யப்பட்டது.

தெரிந்து கொள்ளுங்கள்!

1956—57-ல், ரூ. 2½ கோடி பெறுமானமுள்ள 74 கோடியே 40 இலட்சம் 'நயா பைசா' நாணயங்கள் தயாரிக்கப்பட்டுள்ளதாம்!

கள்ள நாணயங்கள்

1955—56-ல், மொத்தம் ரூ. 1,70,000 மதிப்புள்ள கள்ள நாணயங்கள் கண்டு பிடிக்கப்பட்டதாம்!

1956—57-ல், ரூ. 2,10,000 மதிப்புள்ள கள்ள நாணயங்கள் கண்டுபிடிக்கப்பட்டனவாம்!

கிடைத்த வருமானம்!

சென்னை, ஜூலை 31—

சென்னை நகரத்தில் ஜூன் திங்களில் ஓடிய பஸ்களின் சராசரி எண்ணிக்கை 450. அவை ஓடிய மொத்த மைல்கள் 11,16,090. கட்டணத்தின் மூலம் வசூலான தொகை ரூ. 12,93,960. பஸ்களை உபயோகித்த பிரயாணிகள் எண்ணிக்கை மொத்தம் 1,09,06,173.

கன்னியாகுமரி மாவட்டத்தில் ஓடிய பஸ்களின் எண்ணிக்கை 76. கட்டணத்தின் மூலம் கிடைத்த தொகை ரூ. 2,00,761.

பஸ் போக்குவரத்து அதிகார நிறுவனங்கள்

மத்திய சர்க்கார் சட்டத்திற்கு சென்னையின் எதிர்ப்பு

சென்னை, ஜூலை 31—

மத்திய சர்க்கார் சட்டம் ஒன்றின்படி, நாளை முதல் திருத்தி அமைக்கப்பட வேண்டிய பஸ் போக்குவரத்து அதிகார நிறுவனம் பற்றி டெல்லி சர்க்காருடன் சென்னை சர்க்கார் கடிதப்போக்குவரத்து வைத்துக்கொண்டிருக்கிறது என்றும், இந்த விஷயத்தில் டெல்லியின் கருத்தை மாநில சர்க்கார் ஏற்கவில்லை என்றும் தெரியவருகிறது.

டெல்லி சர்க்கார் அண்மையில், 1939-ம் வருடத்திய மோட்டார் வாகனங்கள் சட்டத்தின் சில அம்சங்களைத் திருத்தி அமைத்தனர்; அந்தத் திருத்தம் போக்குவரத்து நிறுவனங்களை மாவட்ட—மாநில மட்டங்களில் திருத்தி அமைக்கவேண்டுமெனக் கூறுகிறது.

தனது அனுபவத்தின்படி பார்த்தால், இந்த நிறுவனங்களில் அதிகாரிகளல்லாதவர்களைச் சேர்த்துக் கொள்வதால் பெருங் குழப்பமே ஏற்படுகிறது என்றும், எனவே இந்த யோசனையை ஏற்பதற்கு இல்லை என்றும் சென்னை சர்க்கார், டெல்லி சர்க்காருக்குத் தெரிவித்திருக்கிறதாம்!

இங்கிலாந்திற்கும் பாகிஸ்தானிற்குமிடையே பஸ் போக்குவரத்து

மாஞ்செஸ்டர், ஜூலை 31—

மாஞ்செஸ்டருக்கும்—கராச்சிக்கும் இடையே பஸ் சர்வீஸ் ஒன்று ஏற்பாடாகியிருக்கிறது.

இதுதான், உலகிலேயே நெடுந் தொலைவு செல்லும் பஸ் போக்குவரத்தாயிருக்கும் என்று கூறப்படுகிறது.

இந்தப் போக்குவரத்தினை கராச்சி வியாபாரிகள் ஏற்பாடு செய்கின்றனர் என்று கூறப்படுகிறது.

மாஞ்செஸ்டரிலருந்து கராச்சி வர 69 பவுன் (சுமார் ரூ. 920) என்றும், போகவர மொத்தமாக 115 பவுன் (சுமார் ரூ. 1,533) என்றும் கட்டணம் நிர்ணயிக்கப் பட்டிருக்கிறதாம்.

டோவர், ஐரோப்பா, மத்தியக் கிழக்கு வழியாக இந்த பஸ் செல்லுமாம்!

'வேலைநிறுத்தம் செய்யும் நிலை ஏற்படும்'

பம்பாய், ஆக. 2—

வரும் டிசம்பருக்குள் ஊதிய நிறுவனம் ஏற்படுத்தாவிட்டால், இரயில்வே ஊழியர் வேலை நிறுத்தம் செய்யவேண்டிய நிலை ஏற்படும் என்று ஊழியர் சங்கத்தின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

அதிசயமல்ல - ஆனால்!

பம்பாய், ஆக. 1—

போலீஸ் லாரியில் ஏற்றிக் கொண்டுவரப்பட்ட ஐந்து மதுவிலக்குக் குற்றவாளிகள் எப்படியோ தப்பித்துக்கொண்டார்களாம்! நீதிமன்றவாயிலில் லாரி நிறுத்தப்பட்டபோது இந்த உண்மை வெளியாயிற்றாம்! தப்பி ஓடியவர்களைப் போலீசார் தேடி வருகிறார்களாம்!

தாராளமே தாராளம்!

அகதிகளுக்கு வாழ்வு தர அள்ளித் தருவார்களாம்!

புதுடில்லி, ஆக. 1—

வேறு காரியங்களுக்குப் பணம் கிடைக்கிறதோ இல்லையோ, அகதிகளுக்குப் புதுவாழ்வுதரும் திட்டங்களுக்கு மட்டும் தங்கு தடையின்றி பணம் தர நிதி மந்திரி சம்மதித்திருக்கிறாராம்!

கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து ஓடிவந்துவிட்ட அகதிகளுக்கு புதுவாழ்வு தருவதற்காக, ஆந்திரா, மத்தியப் பிரதேசம், ஒரிசா ஆகிய மாநிலங்களைச் சேர்ந்த பரந்த பிரதேசத்தை (தண்டகாரண்யம் என ஒருகாலத்தில் அழைக்கப்பட்ட பகுதியை) ஒதுக்கி, சில திட்டங்களை அமுல் செய்வது பற்றி சர்க்கார் யோசித்துக் கொண்டிருப்பதாகவும், இதற்கு எவ்வளவு பணம் வேண்டுமானாலும் ரூ. 10 கோடி தேவைப்பட்டாலும் நிதி மந்திரி தருவதாகக் கூறியிருக்கிறார் என்றும, அகதி மந்திரி கன்னா கூறியிருக்கிறார், மக்கள்சபையில்!

சேலத்தில்....

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

சர்க்காரின் பரிசீலனையிலிருக்கின்றன' என்று பதிலளித்திருக்கிறார்.

உடன் தோழர் எஸ் வி. இராமசாமி எழுந்து 'இரண்டாம் திட்டகாலத்தில் நிறுவப்படும் அலுமினியத் தொழிற்சாலைகளில், சேலத்திற்கு முதலிடம் தருவது என்று முன்பு செய்த முடிவை—தந்த உறுதிமொழியை சர்க்கார் காப்பாற்றுமா?' என்று கேட்டார்.

பதிலளித்த மந்திரி 'ஏற்கனவே 'தரப்படும்' என்று கூறப்பட்டுள்ள முதலிடம் சேலத்திற்குக் கிடைக்கும்' என்று கூறியிருக்கிறார்.

★

பிரெஞ்சு நிறுவனம் அறிக்கை சமர்ப்பிக்கும்

'பெக்கினே' என்ற பிரெஞ்சு நிறுவனம், மேட்டூரில் அலுமினியத் தொழிற்சாலை ஏற்படுத்துவதற்கான வசதிகளை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாம். இந்திய அரசாங்கம் அழைத்துள்ள நிறுவனங்களில் இதுவும் ஒன்றாகும்.

பவானி வட்ட விவசாயிகள் முன்னேற்ற மாநாடு பொது உறுப்பினர்கள் கூட்டம்

4—8—57 மாலை 3-மணியளவில், பவானி ராயல் தியேட்டருக்கு எதிரிலுள்ள திருமகள் நிலையத்தில், தோழர் கோவை-செழியன் அவர்கள் தலைமையில் மேற்படி கூட்டம் நடைபெறும்; பவானி வட்ட தி. மு. க. கிளைச் செயலாளர்கள்—மாவட்டப் பிரதிநிதிகள்—உறுப்பினர்கள்—விவசாயப் பெருமக்கள் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு கோரப்படுகின்றனர்.

துறையூர் தி. மு. கழக உறுப்பினர்களுக்கு:

4—8—57 பிற்பகல் 2 மணிக்கு துறையூர் தி. மு. க. பொது உறுப்பினர் கூட்டம், கடைவீதியில் உள்ள செட்டியார் சத்திரத்தில், மாவட்டச் செயலாளர் அன்பில் தர்மலிங்கம் அவர்கள் தலைமையிலும், தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி எம்.எல்.ஏ., அவர்கள் முன்னிலையிலும் நடைபெறும்; அதுபோது புதியசெயற்குழு தேர்ந்தெடுக்கப்படும்.

பெங்களூர்—சீரமபுரம் தி. மு. க. உறுப்பினர் கூட்டம்

4—8—57 காலை 9-30மணிக்கு சீராமபுரம் தி. மு. கழகப் பணிமனையில், மாவட்டச் செயலாளர் தோழர் எஸ். வி. பதி அவர்கள் தலைமையில் மேற்படி கூட்டம் நடைபெறும்; கழக வரவு-செலவுக் கணக்குப் பரிசீலனையும், செயற்குழுத் தேர்தலும் நடைபெறும்.

கழகக் கூட்டங்கள்

★

சென்னை-27-வதுவட்டம்
எடப்பாளையம் தெருவில்
(ஒற்றவாடைக் கொட்டகை அருகில்)
கழக முதலாண்டு விழா
3—8—57 மாலை 6 மணிக்கு
தலைவர்: ஆ. இராசன்
பேசுவோர்:
அண்ணா
என். வி. நடராசன்
கருணாகரன்

★

துறையூர்:
பிள்ளையார் கோவில் மைதானத்தில்
4—8—57 இரவு 7 மணிக்கு
தலைவர்: கி. தர்மலிங்கம்
பேசுவோர்:
ஏ.வி.பி. ஆசைத்தம்பிஎம்.எல்.ஏ.
அன்பில் தர்மலிங்கம்
து. ப. அழகமுத்து
பி. ஆர். இரத்தினசாமி

★

திருப்புத்தூர்:
ஆசாத் பார்க்
4—8—57 மாலை 6 மணிக்கு
தலைவர்: மரி. சேபத்தி
பேசுபவர்: சி. பி. சிற்றரசு

★

திருவள்ளூர்:
தர்கா மைதானம்
4—8—57 அன்று
தி. மு. கழக 8-வது ஆண்டுவிழா
தலைவர்:
கே. ஆர். சொக்கலிங்கம் எம்.சி.
பேசுவோர்:
கண்ணதாசன்
டி. எத்திராசன்
எம். ஏ. கனி

★

கரியாப்பட்டணம்:
ஊராட்சி மன்றத்திற்கு எதிரில்
3—8—57 மாலை 6 மணிக்கு
தலைவர்: ந. தருமலிங்கம்
பேசுபவர்:
என். எஸ். இளங்கோ

★

பவானி:
பராசக்தி திடலில்
4—8—57 மாலை 6 மணிக்கு
தலைவர்: க. வெங்கிடுசாமி
பேசுவோர்:
கோவை செழியன்
அத்தாணி பாபு
கே. எம். சென்றுயன்

★

சுண்டக்காமுத்தூர்:
அழகிரி திடலில் (மாரியம்மன் கோவில் மைதானம்)
4—8—57 இரவு 7 மணிக்கு
பேசுவோர்:
சிதம்பரனார்
கே. ஆர். சண்முகனார்
சு. கு. தாண்டவன்
சு. வீ. பழனிச்சாமி

★

திருக்கழுக்குன்றம்:
கம்மாளர் வீதி
3—8—57 மாலை 6 மணிக்கு
தலைவர்: எம். எஸ். ஏ. வகாப்
பேசுவோர்:
சத்தியவாணிமுத்து எம். எல். ஏ.
என். சீவரத்தினம்
ஆர். ஜார்ஜ்

நாஞ்சில் மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தேர்தல்

"நாஞ்சில் மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் பொறுப்புக்கான தேர்தல் 9—8—57-ல் நாகர்கோயிலில், திருமதி சத்தியவாணிமுத்து அவர்கள் தலைமையில் நடைபெறும். இடமும் காலமும் பின்னர் அறிவிக்கப்படும்"

என்று, நாஞ்சில் மாவட்ட தி. மு. கழகப் பொறுப்பாளர் தோழர் எம். சுப்பிரமணியம் அவர்கள் அறிவிக்கிறார்.

சென்னை கெனல்புரம் அம்பேத்கார் மன்றம்-கே.வி.கே.சாமி படிப்பகப்

பொதுக்கூட்டம்

அண்ணா கலந்து கொள்வார்

4—8—57 மாலை 6-மணிக்கு சென்னை—மூலக்கொத்தளம் (பேசின்பிரிட்ஜ் அருகில்) கெனல்புரம் திடலில் மேற்படி மன்றப் பொதுக்கூட்டம் நடைபெறும்; தோழர் ஜி. குசேலர் தலைமையில், **அண்ணா** அவர்களும், தோழர்கள் என்.வி. நடராசன், சத்தியவாணிமுத்து எம். எல். ஏ., ஆர்.ஜார்ஜ், ஆ.இரத்தினம், டி. பி. போகேந்திரன் ஆகியோர் பேசுவர்.

சென்னை — திருவல்லிக்கேணி

இராகவன் நூல் நிலைய

முதலாண்டு விழா

கருணாநிதி கலந்து கொள்வார்

4—8—57 மாலை 6-மணிக்கு மேற்படி நூல் நிலைய முதலாண்டு விழா, சென்னை-திருவல்லிக்கேணி தீர்த்தாரப்ப முதலி தெருவில் நடைபெறும்; தோழர் நீலநாராயணன் தலைமையில், தோழர்கள் மு. கருணாநிதி, ப. உ. சண்முகம் ஆகியோர் பேசுவர்.

மாயூரம் அஞ்சல் ஊழியர்

பொதுக்கூட்டம்

டி. கே. சீனிவாசன் கலந்துகொள்வார்

4—8—57 மாலை, மாயூரம் அஞ்சல் ஊழியர் இணைப்புச் செயற்குழுவின் சார்பில், நகரப் பூங்காவில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் தோழர் டி. கே. சீனிவாசன் அவர்கள் பேசுவார்.

மக்கள் முன்னேற்ற மன்றம் முதலாண்டு விழா

3—8—57 மாலை 6 மணிக்கு மேற்படி மன்ற முதலாண்டு விழா மு. நடராசன் தலைமையில் நடைபெறும்; கே. இராமதாஸ் அவர்கள் கொடியேற்றி வைப்பார்; நகரசபை ஆணையாளர் பாலசுந்தரம் அவர்களும், மற்றும் என். ஜீவரத்தினம், வி. சுந்தரமூர்த்தி, (செட்டியார்), ஐ. மாயாண்டி பாரதி, அருள்மரிநாதன், வே. கபிலன் ஆகியோரும் பேசுவர்.

பரமக்குடி தி.மு.க. பொது உறுப்பினர் கூட்டம்

4—8—57 மாலை 6-மணிக்கு பரமக்குடி தி. மு. க. பொது உறுப்பினர்கள் கூட்டம் மாவட்டச் செயலாளர் தோழர் இ. ல. ம. சௌந்திரபாண்டியன் அவர்கள் தலைமையில் நடைபெறும்; அதுபோது, கழக நிர்வாகிகள் தேர்தல் நடைபெறும்.

கீழமணக்குடி தி. மு. க. பொது உறுப்பினர்களுக்கு:

4—8—57 மாலை 6-மணிக்கு, கழகப் பணிமனையில், உறுப்பினர்கள் கூட்டம் நடைபெறும். அதுபோது பல முக்கியப் பிரச்சினைகளும், திறப்புவிழா வரவு-செலவுக கணக்குகளும் ஆய்வுக்கு வரும்.

சொற்பயிற்சிக் கூட்டம்

4—8—57 காலை 10 மணிக்கு, சென்னை — பெத்துநாயக்கன் பேட்டை மக்கள் மன்றப் பணிமனையில் தேகழர் அரு. சக்ரபாணி தலைமையில், 'அரசியலில் மக்கள் மன்றம்' எனும் பொருள் பற்றி தோழர்கள் சந்திரசேகரன், இராசேந்திரன் ஆகியோர் பேசுவர்.

சென்னை 39-வது வட்ட தி. மு. கழக உறுப்பினர் கூட்டம்

4—8—57 மாலை 3 மணிக்கு சென்னை 39-வது வட்ட தி. மு. க. பொது உறுப்பினர்கள் கூட்டம் கழகப் பணிமனையில் நடைபெறும்.

தேய்ந்துவரும்...

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

றுள்ளது; தேய்ந்துவரும் காங்கிரஸ் கட்சி, தனது இறுதிப் பயணத்தின் எல்லைக்கோட்டைத் தாண்டிவிட்டது. இதை உணர்ந்தால் அவர்கள், நம்மை இழித்தும் பழித்தும் பேச முன்வரமாட்டார்கள்.

"நம்மிடம் இளைஞர்கள்தான் அதிகம் என்கிறார்கள்; அதை ஒப்புக்கொள்ளுகிறேன். அவர்களுக்கு இளைஞர்கள் பற்றிய இலக்கணமும் கூற விரும்புகிறேன். வாலிபர்கள், துடுக்கானவர்கள்—விளைவைப் பற்றி அதிகம் சிந்திக்காதவர்கள்; ஏறுநடை போடுவதில் ஊக்கம் கொண்டவர்கள்; இருந்தும் அவர்கள், அமைதியாக—ஒழுங்காக—கட்டுப்பாடாக—கண்ணியத்துடன் நடப்பதற்குக் காரணம் என்ன? அண்ணா கடைபிடித்து வரும் அரசியல் நாகரீகம்தான்! அதற்குப் பரிசுதான் காங்கிரஸ்காரர்களின் இழிசொல்லும், பழிசொல்லும் போலும்!

"இவ்வளவு அமைதியைக் கடைபிடித்துவரும் நாங்களா நாசக்காரர்கள்? எங்கே பலாத்காரத்தில் ஈடுபட்டோம்? காட்டுங்களேன் பார்க்கலாம்! நல்ல சனநாயகத்திற்கு மக்களின் விழிப்புணர்ச்சி மிக்க அவசியம் என்ற அறிவுரையை அவர்கள் மறக்கக் கூடாது.

"நாங்கள் சட்டசபை சென்றதும் எவ்வளவு மாறுதல்? சட்டசபையில் இட நெருக்கடி ஏன்? உள்ளே நாங்கள் 15 பேர்கள் தானே இருக்கிறோம்? நம்மைத் தூற்றுவோர் இதனை நன்கு புரிந்துகொள்ள வேண்டும். பொதுமக்களுக்கு அரசியல் பற்றி 'ருசி' ஏற்பட்டுள்ளது; ஆட்சி பற்றி பொறுப்பு ஏற்பட்டுள்ளது—மதிப்பு ஏற்பட்டுள்ளது. இதை உருவாக்கிய ஒரே கட்சி திராவிட முன்னேற்றக் கழகம் தான் என்பதை மனச்சாட்சி உள்ள காங்கிரஸ்காரர்கள் ஒப்புக்கொள்ளுவார்கள்; தைரியமுள்ளவர்கள் வெளிப்படையாகவும் கூறுவார்கள். ஆனால், நீங்கள் என்ன செய்தீர்—150 பேர்கள் அல்லவா?

"மற்ற மாநிலங்களில் எதிர்க் கட்சிகள் எப்படி நடந்துகொண்டுள்ளன என்பதைப் பாருங்கள். பம்பாயில் அமளி; பீகாரில் அமளி; ஒரிசாவில் அமளி; இங்கு மட்டும் அமைதி! இந்த அரசியல் நாகரிகத்திற்கு யார் காரணம்?

"முன்பு, 'சட்டசபையில் தூங்கலாமா?' என்ற கேள்வி! இப்போது, 'எங்களுக்கேன் பேசுவதற்கு வாய்ப்பு தரவில்லை?' என்று காங்கிரஸ்காரர்களே கேட்கின்றனர்! யார் இவர்களைப் பேச வைத்தது? திராவிட முன்னேற்றக் கழகமல்லவா? மக்களை இனியும் ஏமாற்றிவிடலாம் என்று கருதாதீர்!"

மேலும் அவர் பேசுகையில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் கருத்துககள் நாட்டில் வேகமாகப் பரவிவருவதைச் சுட்டிக் காட்டியும், அறிஞர்கள் பலர், தி. மு. கழகத்தின் இலட்சியக் குறிக்கோளை வற்புறுத்துவதையும் விளக்கினார்.

நெல்லை நகர் 13-வது வட்ட திராவிட முற்போக்கு மன்றம்

4—8—57 மாலை 6½ மணிக்கு மேற்படி மன்றத்தில், நகரச் செயலாளர் பி. பத்மநாபன் தலைமையில், நெல்லை நெடுஞ்செழியன், வ. நாகூர், இரா. சாமி மற்றும் பலர் 'மறுமலர்ச்சி' என்ற பொருள்பற்றி பேசுவர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.